*KALANJIYAM – International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed academic journal*

e-ISSN: 2456-5148
தொகுதி 6, எண் 03 (2026) 6 03
2026 p53–59

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
10.63300/kijts603112026.04

RESEARCH ARTICLES

# குறுந்தொகை அகமரபும் ஏமாற்றம் படைப்பின் கருத்தாக்கமும் ஓர் ஒப்பீடு

*A Comparison of the Akam Tradition in Kurunthokai and the Concept of Disappointment in Creative Work*

முனைவர் பேபிநிஷாந்தினி மெ.[1,*]

[1] உதவி பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி,திருச்சிராப்பள்ளி – 620002, தமிழ்நாடு, இந்தியா

***தொடர்பு ஆசிரியர்:** முனைவர் பேபிநிஷாந்தினி மெ., babynishanthini@gmail.com

**ORCID iD:** முனைவர் பேபிநிஷாந்தினி மெ. https://orcid.org/0009-0007-6605-967X

## ARTICLE INFO

**Article history**
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 18 October 2026

**Article ID**
KIJTS-2026-0011

**Peer review**
Double-blind peer review

**Keywords**
குறுந்தொகை
ஒப்பீடு
களவு
கற்பு
வரைவு
கள்வன்
கொடியன்

## ABSTRACT

காலங்கள் தோறும் சூழல்கள் மாறுபட்டாலும் மனித குலத்தின் சில விழுமியங்கள் என்றும் மாறுபடுவதில்லை. குறிப்பாக இல்லற நெறியில் ஈடுபடும் தலைவன், தலைவி அவர்களுடைய நட்புக்குரியவர்களின் மனநிலை எப்போதும் மாறாமல் இன்றளவும் விளங்குகின்றன. எனவே சங்க இலக்கியங்கள் எழுதப்பட்ட காலத்திலும், தொகுக்கப்பட்ட காலத்திலும் இருந்த தலைவன், தலைவி இடையிலான உறவுநிலையும் காதல் உணர்வும் பல நூற்றாண்டுகளைக் கடந்து விளங்குகின்றன. இக்கருத்தின் அடிப்படையில் குறுந்தொகப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு இன்றைய சூழலுக்கேற்ப கட்டுரைப் படைப்புகளாக எழுதும் முயற்சியை சிலர் இன்னும் மேற்கொள்கின்றனர். அவ்வகையில் குறுந்தொகைப் பாடல்களின் கருத்து நவீன இலக்கியங்களில் புதிய வடிவில் இடம்பெறுவதை இவ்ஆய்வுக்கட்டுரையில் பொருத்திக் காணலாம்.

### *Abstract*

Although circumstances may change over time, certain values of the human race remain constant. In particular, the state of mind of the man and woman engaged in domestic life, as well as that of their close associates, remains unchanged even to this day. Thus, the nature of the relationship and the romantic sentiments between a man and a woman, as they existed during the periods when Sangam literature was composed and compiled, have endured across many centuries. Based on this perspective, some individuals continue to undertake the task of crafting essays, drawing upon the poems of the Kurunthogai that are tailored to the contemporary context. In this sense, one can observe how the themes found in the poems of the Kurunthogai reappear in modern literature in new forms.

© 2026 The Author(s) · CC BY 4.0 · திறந்த அணுகல்

**Keywords:** Kuruntokai; comparison; clandestine love; marital love; marriage/betrothal; the clandestine lover; the cruel one

**How to cite this article:** மெ., மு. பே. (2026). குறுந்தொகை அகமரபும் ஏமாற்றம் படைப்பின் கருத்தாக்கமும் ஓர் ஒப்பீடு. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 53–63. https://doi.org/10.63300/kijts603112026.04
**Copyright and licence:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

## 1 முன்னுரை

இலக்கியத்தின் அடிப்படைத்தகுதிகளுள் முதலாவதாக விளங்குவது உள்ளடக்கம் என்பதாகும். குறுந்தொகைப் பாடல்களின் திணை, துறை, பாடல் எழுந்த சூழல், கூற்று ஆகியவற்றைக் கொண்டு அப்பாடலின் மையக் கருத்தைக் கண்டறிந்து அதன் தாக்கத்தால் ஒரு புதிய படைப்பை தற்கால படைப்பாளர்கள் உருவாக்குதல் மரபாகவுள்ளது. அவ்வகையில் குறுந்தொகைப் பாடல்களை பின்பற்றி எழுந்துள்ள மு. வரதராசனாரின் குறுந்தொகைச் செல்வம் எனும் கட்டுரைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஏமாற்றம் கட்டுரையின் உள்ளடக்கத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

### 1. ஆய்வு நோக்கம்

சங்க இலக்கியங்களில் அதிக மேற்கோள் நோக்குடன் எடுத்தாளப்பட்ட குறுந்தொகையில் அமைந்துள்ள பாடல்கள், தற்கால எழுத்தாளர்களின் உள்ளத்தில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை அவர்தம் படைப்புகளின் வழி ஆராய்வது இவ் ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும். குறுந்தொகையின் பாடல்களில் உள்ள கருத்துக்களும், அடிக்கருத்தை வெளிப்படுத்த தற்காலப் படைப்பாளர்கள் கையாண்ட உத்திமுறைகளும் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டுள்ளது.

### ஆய்வு அணுகுமுறை

இவ் ஆய்வுக்கட்டுரையில் ஒப்பீட்டுத்திறனாய்வுமுறை என்பது முழுமையாக அடிப்படை ஆய்வுமுறையாகப் பின்பற்றப்பட்டுள்ளது. பாடலின் பொருளை விளக்கும் விளக்கமுறைத்திறனாய்வு பின்பற்றப்பட்டுள்ளது.

## 2 ஏமாற்றம்

இக்கட்டுரையில் குறுந்தொகையில் உள்ள இரண்டு பாடல்களின் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அவை,

கபிலர் இயற்றிய “யாரும் இல்லைத் தானே கள்வன்” என்ற பாடல்,

கொல்லனழிசி இயற்றிய “அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை” என்ற பாடல்,

இவ்விரண்டு பாடலும் தலைவன், தலைவி இருவரின் களவு வாழ்க்கையிலும் வரைவு நீட்டிப்பதால் ஏற்படும் இன்னல்களை எண்ணி ஏமாற்றம் அடைய வேண்டாம் என்று விளக்குவதாக அமைந்துள்ளது.

### 2.1 குறுகு மட்டுமே உண்டு

குறுந்தொகையில் கபிலர் இயற்றிய பாடல் ஒன்று குறிஞ்சித்திணையில் அமைந்துள்ளது. வரைவு நீட்டித்த தலைவனை நினைத்து வருத்தம் கொண்ட தலைவி தன் நிலையை தோழியிடம் உரைப்பதாக அமைந்துள்ளது. இப்பாடலை ஏமாற்றம் என்ற தலைப்பில் மு.வ கட்டுரையாக்கியுள்ளார்.

களவிலே தலைவியை "விரைவில் மணந்து கொள்வேன்" என்ற உறுதிமொழியை தலைவன் மறந்தான். அக்களவு நிகழ்ந்த போது நாரை ஒன்று மட்டுமே சான்றாக இருந்தது. இனி நான் என்ன செய்வேன் என தலைவி, தோழியிடம் புலம்புவதாக அமைந்துள்ளது.

**"யாரு மில்லைத் தானே களவன்**

**தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ**

**தினைத்தா ளன்ன சிறுபசுங் கால**

**ஒழுகுநீ ராரல் பார்க்கும்**

**குருகு முண்டுதான் மணந்த ஞான்றே"**

**(குறு. பா - 25)**

என்பது அப்பாடல். திருமணம் செய்துகொள்ள காலம் தாழ்த்திய தலைவனை எண்ணி தலைவி, தோழியிடம் புலம்புவதாக அமைந்துள்ள இப்பாடலை மு.வ கட்டுரையாக்கியுள்ளார்.

#### 2.1.1 துயர நிலை

இப்பாடலில் தலைவியின் துயர நிலை மையக்கருத்தாக அமைந்துள்ளது. பொதுவாக தலைவனை கதாநாயகனாக புனைவது இயல்பாகும். ஆனால், கபிலர் இங்கு தலைவனை கள்வன் என குறிப்பிட்டுள்ளார். எவரும் அறியாமல் தலைவியைக் கூடியதால் கள்வன் என சுட்டிக் காட்டியுள்ள கபிலரின் புலமையை மு.வ வியந்துரைத்துள்ளார்.

#### 2.1.2 பெண்ணின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல்

மு.வ தன் கட்டுரையில் ஒரு பெண்ணின் மனநிலையை விளக்கும் முன் அவளின் உணர்வுகள் நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்படுவதாக விளக்கியுள்ளார். தலைவன் மீது கொண்ட அன்பின் ஆழத்தின் அடிப்படையில் தலைவியின் உணர்வுகளை மதிப்பிட்டுக்காட்டியுள்ளார்.

"இளமையின் கவர்ச்சி" தலைவன் தலைவி காதல்கொள்வதற்குக் காரணமாக இருக்கிறது. ஆனால் ஆணை விட பெண்ணுக்கே உணர்வுகளால் அதிக இடர்பாடும், துன்பமும் ஏற்படுவதாக மு.வ கட்டுரையைத் தொடங்குகிறார்.

**"சமுதாயமும் இயற்கையும் அவனுக்கு நலம் செய்வனவாக உள்ளன. பெண் அவ்வாறு தப்பித்துக் கொள்ள வழியில்லை. சமுதாயமும் அவளைப் பழிவாங்குகிறது."**

**(குறு.செல். பக் - 66)**

என்று பெண்ணின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து கட்டுரை தொடர்ந்து செல்கிறது. கபிலரின் புலமை பெண்ணின் உணர்ச்சியை அழகாகப் புலப்படுத்துகிறது. இதனை மையமாகக் கொண்டு மு.வ பெண்ணின் பேதமை நிலையை குறிப்பிட்டுள்ளார்.

### 2.1.3 சமூகப் பார்வையில் ஆண் - பெண் உணர்வுகள்

ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திற்குக் கட்டுப்பட்டு வாழவேண்டியனாகக் காணப்படுகிறான். இதனை மு.வ தன் கட்டுரையில் வியக்கியுள்ளார். சமூகப் பார்வையில் ஆணை விடப் பெண்ணே மிக விழிப்பாய் இருந்து தன்னைத் தான் காத்துக்கொள்ள வேண்டும் என்றார்.

சமூகத்தில் காதலால் ஏற்படும் சிக்கல்கள் ஆண்களுக்கு நலம் செய்வனவாக உள்ளன. சமூகத்திற்கும் பெற்றோருக்கும் கட்டுப்பட்டு தலைவன் மணம் செய்ய காலம் தாழ்த்தும் நிலையை மு.வ விளக்கியுள்ளார். இதன் பின்புலத்தில் தலைவியின் துயரசுமை அதிகரித்து வருவதையும், இதனால் அவளின் நம்பிக்கை தளர்வதையும் மு.வ குறிப்பிட்டுள்ளார்.

### 2.1.4 நம்பிக்கை

"ஒரு பெண்ணின் அறிவை மயக்குவதற்கு 'நம்பிக்கை" ஒரு காரணமாக அமைகின்றது. ஆண், பெண் இருவருக்கும் காதல் கொள்வதற்கு நம்பிக்கை அடிப்படையாக அமைகின்றது.

கபிலர், தலைவன் தன்னை விரைந்து மணந்து கொள்வான், தன்னை ஒரு போதும் பிரியமாட்டான், என்று தலைவி அவன் கூற்றை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்பவளாகவும் புலவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், மு.வ தன் கட்டுரையில் நம்பிக்கையும், மனஉறுதியும் "ஏமாற்றம் அடைதல்" என வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.

நம்பிக்கை தளரத் தளர **"ஒரு கால் அவன் கைவிடின் - சொல் திறம்பின் - என்ன செய்வது? எதிர் கால வாழ்வு என்ன ஆவது? நடந்ததை பெற்றோர்க்கு எவ்வாறு உணர்த்துவது? இனி உயிர் வாழ்தல் இயலுமா?" ஏன்றெல்லாம் பற்பல எண்ணங்கள் எழுந்து அவளை அலைக்கும்.**

**(குறு.செல். பக் - 67)**

என்று தலைவி ஏமாற்றத்துடன் புலம்புவதாக மு.வ காட்டியுள்ளர்.

களவிலே தலைவியோடு பழகிய தலைவன் கள்வன் என இனங்காட்டியுள்ளதை மு.வ விளக்கியுள்ளார். விரைந்து மணந்து கொள்வேன் என்ற கூற்றை மறந்ததாலத் தலைவன் கள்வனாகவும், நம்பிக்கை குறைந்தமையால் உறவு கொண்டதற்கான சாட்சியை தலைவி தேடுவதையும் ஒரு பெண்ணின் பரிதாப நிலையில் ஏமாற்றமே மிஞ்சியது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆரல் மீனை பார்த்துக்கொண்டிருந்த நாரையை சான்றாகக் கூற இயலாது. இதனை தலைவி சான்றாகக் கூறுவதும் "காதல் நெஞ்சத்தின் ஏமாற்றமே" என மு.வ குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கபிலர் தலைவியின் நம்பிக்கையால் உண்டான இன்பநிலை, அதன்பின் ஏமாற்றம் அடைந்த துன்பநிலையை குறிப்பிட்டுள்ளார். தலைவியின் நம்பிக்கையை மறந்த தலைவனை புலவர் கள்வர் என சுட்டுகிறார். அதனை வழிமொழிந்து, மு.வ தலைவியின் நம்பிக்கை பின்னாலில் ஏமாற்றமே ஏற்பட்டது என மு.வ கட்டுரையாக்கியுள்ளார்.

**2.2 காலம் தாழ்த்துதல்**

குறுந்தொகையில் கொல்லன் அழிசி இயற்றிய பாடல் ஒன்று குறிஞ்சித்திணையில் அமைந்துள்ளது. இப்பாடலையும் ஏமாற்றம் எனும் கட்டுரைக்கு மு.வ மையப்படுத்திக் காட்டியுள்ளார். தலைவியின் களவொழுக்கத்தினால் ஏற்பட்ட மாறுபாடுகளை அவளுடைய தாயிடம் தோழி தெரிவிப்பதாக அமைந்துள்ளது. திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல் தலைவன் காலம் தாழ்த்துவதனால் தலைவி வருந்துகிறாள். இதனால் தலைவனை கொடியன் எனக்கூறி தோழி அறத்தொடு நிற்பதனை,

**"பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்**

**தகாஅன் போலத் தான்றீது மொழியினும்**

**தன்கண் கண்டது பொக்குவ தன்றே**

**தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்**

**வரையாடு வன்பறழ்த் தந்தைக்**

**கடுவனு மறியுமக் கொடியோ னையே"**

**(குறு.பா - 26)**

என்பது அப்பாடல்.

களவொழுக்க புணர்ச்சியைக் குறிப்பிடுவதால் இவை குறிஞ்சித் திணை சார்ந்ததாக அமைந்துள்ளது. குறிஞ்சி நிலத்தின் மலை சார்ந்த இடமும், அதன் கருப்பொருள்களான

பறவைகள், விலங்குகள், பற்றிய வருணனைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைவனை நினைத்து தலைவி உடல் மெலிந்து காணப்பட்டால். தன் மகளின் இந்நிலையைக் கண்டு செவிலித்தாயும், நற்றாயும் கட்டுவிச்சியை அழைத்து தன் மகள் உடல்மெலிந்ததற்கு காரணம் கேட்டனர். அந்நிலையில் தோழி அறத்துடன் நிற்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

தலைவன் தலைவியின் உறவுநிலையை இல்லை என பொய்மொழிக் கூறினாலும் மலைகளில் விளையாடிய ஆண்குரங்கு இவ்வுறவிற்கு சான்றாகும். அது உண்மையை மறைத்து பொய்க்காது என தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

**2.2.1 தலைவியின் உடல் நோய்**

இப்பாடல் தலைவியின் உடல் நோயினை மையக்கருத்தாகக் கொண்டுள்ளது. இங்கு தலைவனை கொடியோன் என புலவர் குறிப்பிட்டுள்ளார். பொய்மொழிக்கூறி தலைவயை கைவிட்டதால் அவன் கொடியோன் எள புலவர் கூறியுள்ளதை மு.வ எடுத்துரைத்துள்ளார்.

மு.வ இப்பாடலின் கருத்தினை தலைவிக்கு மட்டுமின்றி அவள் குடும்பத்தினருக்கும் துன்பமாக பொருந்துவதை ஏமாற்றம் என்ற தலைப்பில் கட்டுரை அமைத்துள்ளார்.

**“தகுதியற்றவன் போல் அவன் நம்மைக் கைவிடினும் நம் வாழ்வுக்குத் தீமையான பொய்மொழியே கூறினும், அன்று அங்கிருந்த ஓர் உயர் தன் கண்ணால் கண்டதை மறைத்து பொய்க்காது அன்றோ?”**

**(குறு.செல். பக் - 68)**

இவ்வாறு குறுந்தொகையில் கபிலர், கொல்லன் அழிசி போன்ற புலவர்களின் பாடல்களை முன்னுறுத்தி ஏமாற்றம் எனும் கட்டுரையை மு.வ எழுதியுள்ளார்.

இவ்வாறு மு.வ வின் ஏமாற்றம் என்ற கட்டுரையில் உள்ள இரண்டு பாடல்களும் குறுந்தொகைப் பாடல் கருத்துக்களை தழுவி எழுதப்பட்டுள்ளது.

**3 முடிவுரை**

குறுந்தொகைப் பாடல்களைத் தழுவி இயற்றப்பட்ட படைப்புகளில் ஒன்றான இக்கட்டுரைத் தொகுப்பில் அமைந்துள்ள ஏமாற்றம் எனும் கட்டுரையில் அமைந்துள்ள கருப்பொருட்கள், பாடுபொருள், உத்திகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. காதல், வீரம், இயற்கையின் வருணனை, பின்னனி போன்ற அம்சங்களில் இருகடைப்புகளும் ஒத்திருக்கின்றன, வேறுபடுகின்றன என்பதை ஒப்பிட்டு பார்ப்பதே இவ்ஆய்வின் நோக்கமாகும். புலவர்கள் இயற்றிய பாடல்களுக்கும், தற்கால நவீன படைப்பாளிகளின் படைப்புகளுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை அறிய முடிகிறது.

## துணைநூல் பட்டியல்

[1.] சாமிநாதைய்யர். உ.வே. குறுந்தொகை. டாக்டர் உ.வே.சா நிலையம். சென்னை. 2000.

[2.] ராகவையங்கார். இரா. குறுந்தொகை. கௌரா பதிப்பகம். திருச்சிராப்பள்ளி. 2016.

[3.] வரதராசன்.மு. குறுந்தொகைச் செல்வம் கட்டுரைத் தொகுப்பு. பாரிநிலையம். சென்னை. 2011.